உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 7 | துன்மதி௵ - ஆடிமீ<br>1921௵ ஜூலைமீ | இதழ் 4 |
| --- | --- | --- |


உள்ளுறை — பக்கம்.


| உள்ளுறை | பக்கம். |
| --- | --- |
| சிவஞான போதம் ... ... ... | 73 |
| கடவுள் பிறப்பிறப் பில்லாதவர் ... ... ... | 76 |
| வேதத்தின் உற்பத்தி ... ... ... | 78 |
| சிவபூஜாதிகார வினு விடை ... ... ... | 83 |
| திருவண்ணுமலை தீப தரிசனச் சுருக்கம் ... ... | 87 |
| சர்வாலய தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம் ... ... | 90 |
| சிவாசாரிய பிரகரணம், சைவ தூஷண பரிகாரம் ... | 93 |
| சரீரசுத்திப் பிரகரணம் ,, ... ... | 94 |
| ஓங்கார விளக்க நூல் ... ... ... | 96 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

**1921.**

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ப்ரணவ வித்யா பரிமளம் என்னும்

# ஓங்கார விளக்கம்.

(நானூறு வேதப் பிரமாணங்கள் கிரந்தலிபியில் தமிழுச்சரிப்புடன் பொழிப்புரையுஞ் சேர்ந்துள்ளன.)

இவ்வரிய நூலில் சர்வசப்தமய அர்த்தமயப் பிரபஞ்சங்களுக்கு மூலகாரணமாயுள்ள ஒப்பற்ற ஒருமொழி ஓங்காரமெனவும், அதுவே சர்வமந்திர சாரபூத அருணுதமெனவும், அதில் இயைந்துள்ள மந்திரார்த்தம், யந்திரார்த்தம், பிரபஞ்சார்த்தம், தேவதார்த்தம், ஞானார்த்தம் ஆகிய இவைகள் முமுட்சுக்களால் அறியற்பாலன வெனவும் நன்கு விளக்கப்பட் டிருக்கின்றன. அன்றியும், ஓங்காரத்தின் நான்காவதான அர்த்தயாத்திரையின் தேவதையாகிய புருஷசப்த வாச்சியர் மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட துரீயசிவனெனவும், அவரே புருஷஸூக்தத்திற்கும், காயத்திரி மகாமந்திரத்திற்கும் உட்பொருளா யுள்ளவரெனவும், தாரகமந்திரம் எஞ்ஞான்றும் பிரணவத்தையே ரூடியாகக் குறிப்பதன்றி இராமநாமத்தைக் குறிக்காதெனவும், ஆத்ம மந்திரமாகிய ஹம்ஸ மந்திரமே ஸோஹம் என்னும் மஹா மந்திரமாய்த் திகழுமெனவும், அதில் தேவமூலமாகிய பிரணவம் இடர்ப்பட்டிருக்கின்றதெனவும் ஸ்பஷ்டமாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன இன்னும் அநேக பிரணவ இரகசியங்கள் வெளிவந்துள்ளன. இறுதியில் புருஷஸூக்தமும் சேர்க்கப்பட்டுள்ளது. இது எவர்க்கும் பயன்படுமாறு அடியேனல் நானூற்றுக்கு மேற்பட்ட வேதப் பிரமாணங்களோடு இலகுவான நடையில் திருவருளை முன்னிட்டு வரையப்பட்டுள்ளது. டெம்மி 8-பக்கங்கொண்ட 30-பாரங்களாய்த் திகழ்கின்றது.

இதன் விலை ரூபா 2—4—0 தபாற் கூலி வேறு. வேண்டுவோர் அடியேனுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம் விலை அணா 0—2—0.

இங்ஙனம்:

சோ. சிவ அருணகிரி முதலியார்,

38, முருகப்பமுதலி தெரு, புரசைவாக்கம்,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் 7 | துன்மதிஞு ஆடிமீ<br>1921ஞு ஜூலைமீ | இதழ் 4 |
|---|---|---|


## தேவாரம்.

அருமறையனை யாணொடு பெண்ணனைக்
கருவிடம் மிகவுண்ட வெங்கண்டனைப்
புரிவெண் ணூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி னைபவ ருள்ளங் குளிருமே.

---

## சிவஞானபோதம்.

(53 - ம் பக்கத்தொடர்ச்சி)

### பதினொராஞ் சூத்திரம்—இரண்டாம் அதிகாரணம்.

### அதனை அயராவன்பி னரன்கழல் செலுமே.

(இ - ள்) ஆன்மாவானது முதல்வன் அத்துவிதமாய் உடனின்று கருணை மேலீட்டினல் உபகரித்துவரும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அவன்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூர்தலின் அவ்விச்சையே தானக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப் பெறும் (எ - று)

இதில், 1-வது—தன்னற் கூறப்படும் பொருள்:—முதல்வன் செய்யும் உபகாரத்தை மறவாமல் அன்பு செய்தால் உயிர் அவன் சீபாதத்தை யடையும்.

2-வது—ஐயப்பாடு—உயிர் பத்தி செய்தலினலேயே முதல்வன் சீபாதத்தை அணைதல் கூடுமோ?

3-வது—பிறர் கூறும் பக்கம்—ஒரு பொருளை யறிந்த மாத்திரத்திலேயே அதனிடத்தில் இச்சை நிகழக்கூடுமாயினும், இச்சை

யுண்டான மாத்திரத்திலேயே அப்பொருளை யடைதல் கூடும் என்பது உலகத்திலில்லை. ஆதலால், ஆன்மா பக்திமாத்திரையால் முதல்வன் சீபாதத்தை யணைவது கூடாது. பத்தியாவது சீவன் முத்தி நிலைக்குச் செய்யப்படும் ஒரு சாதனமேயாம்.

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—முதல்வன் உலகத்தார் போலன்றி பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் உடனின்று கொண்டு, யார் யார் யாது செய்கின்றாரென்று அறிந்து, அவரவர்க்கு அவ்வச்செய்திக்குத் தக்கபயனை அவ்வப்பொழுதே விளைவிப்பவனாகலான், உயிரானது பத்தியினால் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணைவது திண்ணம் - அன்பு பத்தி என்பனவற்றிற்கு இச்சை மீதூர்தல் என்பது பொருள் - பரமுத்தி நிலைக்கண் இச்சை நிகழாதபோது சிவபோகம் அநுபவமாதலில்லையாகையால் அவ்விடத்தும் இச்சை மீதூர்தல் உண்டென்பதறிக. மறவாதேத்துதலென்பது அயராதருள் வழி நிற்றலை.

5-வது—இயைபு—உதாரண வெண்பா:—

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க்கீச—னருட்கண்ணாற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

(இ - ள்) அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே—(படல விசேடத்தால் ஒளி மழுங்கிய கண்ணிடத்தும், அது நீங்கி ஒளி விளங்கிய கண்ணிடத்தும் வேற்றுமையின்றி) ஆதித்தன் சமமாய் நின்றாலும், அவ்வாதித்தன் ஒளி மழுங்கிக் காட்சியில்லாத கண்ணுக்கு மாலையிருளேயாய்த் தோன்றுவன். (ஒளி விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறு போல விளங்கித் தோன்றான்). அது போல்,—ஈசன் பாசத்தார்க்கு இருட்கண்ணே=முதல்வன் (பெத்தரிடத்தும் முத்தரிடத்தும் அத்துவிதமாய் ஒப்பநின்றாலும்) பாசத்தானாகிய ஏகதேச அறிவுடைய பெத்தர்க்குப் பாச ஞானமேயாய்த் தோன்றுவன்—அருட்கண்ணால் நேசத்தில் தன் உணர்ந்தார் நேர் பாசத்தை நீக்கும்=(அப்பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கித் தனது) திருவருட் பார்வையாற் பத்தி செய்து தன்னை அறிதற்குரிய பக்குவமுடைய ராயினார்க்குப் பாசத்தானாகிய அவ்வேகதேச அறிவை மாற்றிப் பூரண அறிவு விரியச்செய்து அவரெதிரே விளங்கித் தோன்றுவன்.—(எதுபோலுமெனின்)—பகல் அலர்த்தும் தாமரைபோல்=தனது கிரணம் தீண்டிப் பக்குவமெய்

திய தாமரை மலருக்கு முன்னுள்ளதாகிய கூம்புதலை மாற்றித் தன்போல் ஆயிரமிதழும் அலரச்செய்யும் ஆயிரங்கதிர்ப்பரிதி போலும் (எ - று.)

அல்லும் காணுரும், பாசமும், பகலும் ஆகுபெயர். தோற்று வன் என்பது சொல்லெச்சம்.

இதனால் முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினும் திரிபின்றி ஒரு பெற்றித்தாகிய அத்துவிதமாய் நின்று உபகரிப்பானாயின், பெத்த நிலையினும் அம்முதல்வன் புலப்படல் வேண்டாமோ என்னும் ஆசங்கையை அகற்றிய வாறாயிற்று.

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான்.

(இ - ள்.) மன்னும் இருளை = கண்ணின் கண் நிலை பெற்றுள்ளதாகிய இருளை = மதிதுரந்தவாறு = பூருவ பக்கத்துச் சந்திரன் உடனாய் நின்று முறை முறையான் உந்தித் தள்ளிய வாறு போல = அன்பின் மன்னும் அரனே = ஆன்மாவைத் தனது திருவடியினிடத்துச் சேர்த்துக் கொள்வதன் கண் உள்ளதாகிய இச்சை மிகுதியான் அவ்வான்மாவின் கண் அனாதி முதல் அத்துவிதமாய் நிலை பெறும் முதல்வன்றானே—மலம் துரந்து = அவ்வான்மாவின் கண் நிலைபெற்ற ஆணவமலத்தைச் சோபானமுறையில் உந்தித்தள்ளி—காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் சலிப்பு இல் = காந்தக்கல் இரும்பைத் தன்னிடத்தே ஈர்த்துக் கொண்டு தன் வசமாய்ப் பற்றச் செய்தல் போலத் தனது திருவடியின் கண் சேர்த்துத் தன் வசமாய்ப் பற்றிக்கொண்டு நிற்கும்படி பண்ணுதல் அவனுக்கு ஒரு போதும் சலித்தொழிதலில்லை = விகாரி அலன் தான் = (அவ்வாறு சலியாது செய்யுமாயினும் அதனால்) விகாரியாவானல்லன் (எல்லாத் தொழிலும் தனது சந்நிதியின் கண் சத்தி சங்கற்ப மாத்திரையாய்ப் பரமின்றி, அதாவது இலேசாக, விளையாட்டைப்போலச் செய்யும்) அம்முதல்வன் (எ-று.)

ஏகாரம் மலத்தைத் துரத்துதற்குக் காரணம் அவ்வன்பெனப் படும் இச்சை யன்றிப் பிரிதில்லை யென்பதுணர்த்தி நிற்றலில் பிரிநிலை. வசஞ் செய்வான் செய்தல் = வசஞ் செய்தல்போல் செய்தல். வசமாதல் = பற்றி விடாமை. செய்வானது சலிப்பின்மை செய்கை மேலேற்றப்பட்டது.

இதனால் முத்திநிலையில் ஆன்மாவினது அன்பு நிகழுமாறும் அது முதல்வன் அன்பையின்றி அமையாமையும் விளக்கிய வாறாயிற்று. (தொடரும்.)

---

## கடவுள் பிறப்பிறப்பில்லாதவர்.

(இந்து சாதனப் பிரசுரம்.)

எல்லார் பிறப்புமிறப்பு மியற்பா வலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோணேசர்—இல்லிற்
பிறந்த கதையுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்த கதையுங்கேட்டிலேம்.

என ஆப்தர் ஒருவர் எடுத்துக் காட்டியபடி, கடவுள் பிறப் பிறப்பில்லாதவர். பிறத்தல் இறத்தலை உடையார்க்கு அந்தப் பிறத்தல் இறத்தல்களுக்கு ஏதுவாகிய கன்மம் உண்டென்பதும், அந்தக் கன்மம் உடையார்க்கு விருப்பு வெறுப்பு உண்டென்ப தும், விருப்பு வெறுப்புடையார்க்குக் குறைவிலா நிறைவு உளதாக மாட்டாதென்பதும் பெறப்படும். படவே, பிறத்தல் இறத்தல்களை உடையார் கடவுட்டன்மை உடையராகமாட்டார் என்பது நன்கு போந்திடும். அல்லாமலும், பிறத்தல் இறத்தல்களை உடையாரை அப்பிறத்தல் இறத்தல்களின்கட் செலுத்துவார் ஒரு தலைவர் பிறர் உண்டெனப்படுவர். படவே, பிறத்தல் இறத்தலை உடையார் தலைவராவது செல்லாதாகலின், அவர் கடவுளரெனப்படுவதில்லை என்க.

இனி, பிறத்தலாவது, பசிதாக மோகங்கட்கும், காமக் குரோத மதங்களுக்கும் உரியதாய்ச் சத்த தாதுக்களால் அமைந் ததாய் உள்ளதோர் உடம்பை எடுத்து மாதாவின் கருப்பத்திற் றங்கிப் பல வேதனைப்பட்டு வெளித்தோன்றுதல். இறத்தலாவது, இங்ஙனம் எடுத்த உடம்பை விடுத்துக் காலாந்தரத்திலே உயிர் நீங்குதல். பசி தாக மோகங்கட்கும் காமக்குரோத மதங்கட்கும் உரியராதலும், காலகதிப்பட்டு உயிர் நீங்கப்பெறுதலும் கடவுளுக் குரிய இறைமைக் குணத்தோடு முரணுறுமாதலின், இவற்றுக் கேதுவாகிய உடம்பை எடுத்தலும் விடுத்தலும் கடவுளிடத்துக் காணப்படா என்க.

இங்ஙனமாயின், கடவுள் வடிவங்கொள்ளுதலும் குற்றத்தின் பாற்படுமோ எனின், கடவுளுடைய வடிவம் பசி தாக மோகங்கட்

காவது, காமக் குரோதாதிகட்காவது காரணமாவதொன்றல்ல. அல்லதூஉம், அது மாதாவின் கருப்பத்திற்றங்கி வெளித் தோன்றுவதுமல்ல. அது யாதொரு காலாகதிப்பட்டு மரணத்தின் வாய்ப்படுவதுமல்ல. அது கடவுளுடைய திருவருளே உருப்பாகக்கொண்டு, அனுக்கிரக நிமித்தமாக வேண்டிய வேண்டிய காலங்களிலே கடவுளாற் கொள்ளப்படுவது. அனுக்கிரகமுற்றிய பின் அந்தர்த்தானமாய் விடுவது. இங்ஙனந் தோன்றுதலும் மறைதலும் பிறப் பிறப்பெனப்படமாட்டா.

அல்லாமலும் கடவுள் இயற்கை வரம்புக் கமைந்தாரல்லர். அவர் இயற்கை நியதிக்கு மேற்பட்டவர். அவருடைய வடிவுக்கு யாதொரு இயற்கைமுறையுங் காரணமாக மாட்டாது. இயற்கை முறைகள் எல்லாம் மலசம்பந்தமாகிய ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாவன வன்றி மலரகிதராகிய கடவுள் கொண்டருளும் திருமேனிக்குக் காரணமாகா தென்க. இந்த இயற்கை நியதி கொண்டு உடம்பெடுப்பார் எவர், அவரெல்லாம் சீவர்கள் என்பதும், அந்த இயற்கைநியதியிற் றவிர்ந்து வடிவு கொள்வார் எவர், அவர் கடவுள் ஒருவரே என்பதும் சீவேச இலக்கணங்களை ஆராய்தலுறுவார்க்கு நன்கு புலப்படும். கடவுளுக்கும் ஆன்மாக்களுக்கும் உளதாய பேதத்தைத் தெரித்தலின் இதுவோர் பிரதம சாதனமாகும். ஆகவே ஆன்மாக்களுக்கே பிரத்தியேக உரிமையுடைய பிறப்பிறப்புகள் கடவுளிடத்துக் கேட்கப்படுதல் சாலாதென்க.

இன்னமும் கடவுள் வடிவங்கொள்வ தெல்லாம் ஆன்மாக்களாகிய பிறர் பயன் கருதியன்றித் தம்பயன் கருதியன்று. ஆன்மாக்களாகிய பிறர்க்குப் பயன்படுதற் பொருட்டாக, அவர்களுடைய தேகத்தை ஒத்ததோர் மாமிசதேகத்தைக் கடவுள்கொள்வர் என்றால், அதனால் அவ்வான்மாக்களுக்கு எய்தற் பாலதாகியதோர் ஆக்கம் சிறிதும் இல்லையாம். ஆகவே அவர்கொள்ளும் வடிவம் நம் போலியரது மாமிசதேகம் போலாது, அருளே வடிவாகக் கொண்டதோர் அருட்டிரு மேனியேயாகும். அந்தத் திருமேனி பிறப்பிறப்புட் படாததோர் அருமைத் திருமேனியாதலின், அந்தத் திருமேனியைக் கடவுள் கொள்ளு முகத்தால் அவர் பிறப்பிறப்புட்பட்டார் எனப்படமாட்டார். அன்றியும், யாதொரு மாமிச தேகத்தை எடுத்து, அந்தத் தேகத்தைப் போஷித்தற் பொருட்டாக அன்ன பானாதிகளை அருத்தி, அங்ஙனம் அருத்து

முகத்தால் தமக்கொரு பயனைப் பெறுவார் குறைவுடையர் எனப் பட்டுக் கடவுளிலக்ஷணத்திற் பிறழ்ந்திடுவர். அதுமட்டோ, அவர் அந்தத் தேகத்தின் கண் அமைந்துள்ள பொறி புலன் கரணங்கள் வாயிலாகத் தமது அறிவு வியஞ்சகமுறும் பலனையும் எய்துவாராத லின், தமது அறிவு வியஞ்சக முறுதற்கு யாதொரு மாமிச தேகத்தை வேண்டி நிற்பார் கடவுட்டன்மைக்கு உரியராவது ஒரு போதும் கூடாதென்க. இந்த மாமிச தேகம் பிறப்பிறப்புக்குரிய தாகலின், இந்தத் தேகத்தை எடுப்பார் எல்லாம் பிறப்பிறப்பின் பாற்படும் சீவர்களே யன்றி, கடவுளர் எனப்படுவது சிறிதும் அமையாது.

---

## வேதத்தின் உற்பத்தி.

### (ஞானசித்திப் பிரகாரம்.)

வேதம் என்னும் சொல் விதஃ என்னுந் தாதுவினின்றும் பிறந்தது. விதஃ - அறிவு. வேதம் - அறிதற்குக்கருவி. அதாவது, ஞானத்திற்குச் சாதனமாயுள்ளது என்பதாம். இங்கே ஞான மென்றது உண்மை ஞானமாகிய பரஞானத்தை. வேதத்தான் வரும் ஞானம் அபரஞானம். அவ்வபரஞானம் மேல்வரும் பர ஞானத்திற்குச் சாதனமாம். அதுபற்றியே வேதம் ஞானத்திற் குக் கருவியெனப்பட்டது.

வேதம் காரியம்; என்னை? பலசாகைகளும், பலகாண்டங்களும், பல அத்தியாயங்களும், பல மந்திரங்களும், பல பதங்களும், பல எழுத்துக்களும் என்னும் இவற்றின் கோவைப்பாட்டோடு விளங் கிப் பிரபஞ்சரூபமாய் நிற்றலினென்க. எதுபோலுமெனின், இவ் வுலகம்போலும். இவ்வுலகம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகா யம் என்னும் பூதங்களின் காரியமாய்ப் பல அவயவப் பகுப்புடை யதாய் நிற்றலின், இதனைக் காரியமென்பர். வேதமும் பல அணுத்திரளின் காரியமாகிய எழுத்துக்களோடும், பதங்கள், மந் திரங்கள் முதலியவற்றோடும் கூடித் தொடர்புபட்டு விரிந்து அவ யவப் பகுப்புடையதாய் விளங்குதலின், உலகம்போல அதுவும் காரியப்பாடுடையதேயாம். அதனல் அது பிரபஞ்சம் எனப்படும். உலகம் பொருட் பிரபஞ்சம்; வேதம் சொற்பிரபஞ்சம். "சொல் லும் பொருளுமாய இருகூற்றுப் பிரபஞ்சம்" என்பதும் இது நோக்கியேயாம்.

உலகம் மாயாகாரியம். அதாவது, மாயையினின்று கலையும், கலையினின்று பிரகிருதியும், பிரகிருதியினின்று குண தத்துவமும், அதினின்று புத்தியும், அதினின்று அகங்காரமுமாகத் தோன்ற, அவ்வகங்காரத்தோடு தாமதகுணஞ் சேர்ந்த பிரிவினன் வந்த பூதாதியகங்காரத்தினின்றும் சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னுந் தன் மாத்திரைகளாகிய சூக்கும பூதங்களும் அவற்றினின்று, அதாவது, சத்த தன்மாத்திரையினின்று ஆகாய மும், பரிசதன்மாத்திரையினின்று வாயுவும், உருவதன்மாத்திரை யினின்று தேயுவும், இரததன்மாத்திரையினின்று நீரும், கந்ததன் மாத்திரையினின்று மண்ணும் என இவை இவ்வாறே தோன்றும். பின் சொல்லிய இவை பஞ்சபூதங்களெனப்படும். இப்பஞ்சபூதங் கள் அணுவடிவாய் விளங்குவன. அவ்வணுக்களின் கூட்டத்தால் எதிரே காணப்படும் மண், புனல், அனல், வளி, வான் ஆகிய பௌதிக உலககாரியம் பிறக்கும். இதனையே பிரபஞ்சமென்பர். பிர - உபசர்க்கம். பஞ்சம் - விரிவு. அதாவது, மிகவும் விரிந்த இயல்பையுடையது என அதன் நிலையை உணர்த்துவது.

இப்படியே, சுத்தமாயை யெனப்படுங் குண்டலிசத்தியி னின்று நாதமும், நாதத்தினின்று விந்துவும் தோன்ற, அவ்விந் துவினின்று சூக்குமை, அதினின்று பைசந்தி, அதினின்று மத் திமை, அதினின்று வைகரியாக எழுத்துக்களும், அவற்றின் கோவைப்பாடுகளுமாகிய வாக்குக்கள் தோன்றும். அவைபதங் களாம், அவற்றின் தொடர்பு மந்திரங்களாம், அவற்றின் கோவை அத்தியாயங்களாம். அவற்றின் கோவை காண்டங்களாம். அவற் றின் தொகுதி சாகைகளாம். அவற்றின் தொகுதி வேதமாம். அதனால், வேதம் சுத்தமாயையினின்றுந் தோன்றிய நாதகாரிய மாய், உற்பத்தி திதி நாச முடையதாய், சொற்பிர பஞ்சமாய்க் காரியமெனப்பட்டு விளங்குமென்க.

வேதம் ஒரு கர்த்தாவையுடையது. என்னை? பிரபஞ்சரூப மாய்த், தோற்ற நிலையிறுதிகளை யுடையதாய், விகாரமாய்ச், சட மாய், மாயாகாரியமாய்ப் பாதந்திரப் படுவதாய் நிற்றலா னென்பது.

அது எதுபோலுமெனின், இவ்வுலகினைப் போலும். உலகம் பிரபஞ்சரூபமாய்த் தோற்றநிலையிறுதிகளை யுடையதாய், விகார மாய்ச், சடமாய், மாயாகாரியமாய்ப் பரதந்திரப்படுவதாய் நிற்ற லின், அதனைத் தோற்றுவித்து நிறுத்தி அழிக்கும் ஒரு முதல்வன்

அதனின் வேறாக வேண்டப்படுவன் என்பது யார்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாம். அது போலவே வேதத்துக்கும் ஒரு கருத்தா உண்டென்பது வெள்ளிடை மலைபோல் இனிது விளக்கமாம்.

வேதம் சுயம்புவாகிய முதல்வனால் அருளப்பட்டமையின், அது காரணமாக, அதனையும் சுயம்புவென்பர். அங்ஙனங் கூறுதல் உபசார மெனப்படும்.

வேதத்தை நித்தப் பொருளென்றும் உபசரித்துக் கூறுவர். எதனாலெனின், அது சுத்தமாயையினின்று, விருத்தி, பரிணாமம், விவர்த்தனம் என்னும் மூவிதகாரியப்பாட்டுள், உலகம்போலப் பரிணமித்தலின்றி, விருத்தி ரூபமாய்த் தோன்றி நின்று மீள ஒடுங்குதலாலும், அம்மாயை சிவசத்தியினும் அச்சத்தி சிவத்தினும் அடங்குதலாகிய ஒடுக்கத்தினும் அவ்வேதம் அழிவின்றிக் காரண ரூபமாய் ஒடுங்கி நிற்றலாலும், சற்காரியவாத முறைபற்றி அங்ஙனம் உபசரித்துக் கூறப்படும். அதுவன்றிக் காரியரூபமான பிரபஞ்சமே நித்தமாயிருக்கு மென்பது கருத்தன்று. அதனது தோற்ற ஒடுக்கங்கள் எல்லா நூல்கட்கும் சம்மதமா மென்பதும் உணரற்பாற்று.

இன்னும், வேதத்திலே பல தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அரசர்களுக்கும் இடையில் நிகழ்ந்த உபதேசக்கிரமங்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக, அதர்வசிரசு என்னும் உபநிடதம் அதர்வண வேதத்தின் அதர்வசிரசு என்னும் சாகையின் அந்தத்திலுள்ளது. "அதர்வ" என்பவர் ஓர் இருடி. அவர் பிரமாவின் புதல்வர். அவர் சிவத்தியானஞ் செய்திருக்குங்காலத்து, அத்தியாயன சோதி சிரசைப்பிளந்து மேலெழுந்து இச்சாகையாக, அதனால் அதர்வசிரசு என்னும் பெயரால் அச்சாகை விளங்கும் என்று தைத்திரிய சங்கிதை முதலிய வேதபாகங்கள் கூறுகின்றன. இதனால் உலகப்பொருள்களில் அடங்கும் பிரமா அதர்வமுனிவர் என்பாரின் சரித்திரபாகமும் அதர்வசாகையின் உற்பவமும் அதர்வணவேதத்தில் விளங்குதல் கண்டுகொள்க.

இன்னும், அதர்வசிரத்து முதன்மந்திர மாதியவற்றில் "தேவர்கள் சுவர்க்கத்தையடைந்து, அவர்கள் உருத்திரனைக் கேட்டனர். நீர் யாரென்று" "அவன் உபதேசித்தான்; நான் ஒருவன் ஆதியிலிருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன்; வேறொரு

வன் என்னில் வேறு இருக்கவில்லை" என்பது முதலாகத் தேவருத்திர வினுவிடையுபதேசக் கிரமங்கள் காணப்படுகின்றன.

அதர்வசிகையென்பது, அதர்வண வேதத்து ஒன்பது சாகைகளில் ஒன்றன்கணுள்ள உபநிடதம்.

அதில் "இனி சர்வப்பிரசித்தரான இந்த அதர்வண முனிவரைப் பைப்பலாதரும், அங்கிரசும், சனற்குமாரரும் வினவினர்" என்று தொடங்கி, அவர்களுக்கு அந்த அதர்வண முனிவர் உபதேசித்த உபதேசம் சொல்லப்பட்டது. அதர்வண முனி ததீசி முனிவரின் பிதா. அசுவினி தேவர்களுக்கு மது வித்தையுபதேசித்தவரென இவர் வரலாறு இருக்கு வேதத்திலுங் காணப்படுகின்றது. பைப்பலாதர் ததீசியின் புதல்வர். அதர்வண முனிவருக்குப் பௌத்திரர். அங்கிரசு பாரத்துவாசரின் சீடர். இவரை முண்டகோபநிடதம் மிகப்புகழும். சனற்குமாரர் பிரமபுத்திரர்.

இன்னும், மைத்திராயணியம் என்பது சாமவேதத்தின் ஓர் சாகையிலுள்ள உபநிடதம். அதில் அடியில்வரும் சரித்திரம் சொல்லப்படுகின்றது:—

"பிருகத்ரதனென்ற அரசன் இராச்சியத்தில் தனது மூத்த குமாரனை வைத்து, இந்தச் சரீரம் நிலையற்றதென வெண்ணி, வைராக்கிய மடைந்து காட்டுக்கு ஏகினன். அங்கே மேலான தவத்தினைச் செய்து சூரியனை நோக்கி உயர்த்திய கையுடையவனாய் இருக்கின்றான். ஆயிரம் வருடம் சென்றபின்பு, புகையில்லாத நெருப்பைப்போல் தேஜசால் கொளுத்துவார்போல் ஆத்மவித்தான பகவான் சாகாயனிய முனிவர் எதிரே தோன்றினர்" என்றும், அவர் அவனை இட்சுவாகுவம்சத்திற் சனித்த அரசனே" என விளித்தார் என்றும், அரசன் "எமக்கு முந்தியிருந்த மகா பராக்கிரமமுடைய சக்கிரவர்த்திகள் அநேகரும், சுத்துயும்னன், இந்திரதுயும்னன், குவலயாசுவன், யுவனசுவன், வத்திரியாசுவனன், அசுவபதி, சசிபிந்து, அரிச்சந்திரன், அம்பரீஷன், அநநுக்தன், சுவர்யாதி, சர்யாதி, அநரண்ணியன், அட்சசேனன் முதலியவர்களும், இன்னும் மருத்தன், பரதன் முதலிய சில மன்னர்களும் பந்துவர்க்கங்கள் விழித்துக்கொண் டிருக்கும்போதே பெரிய ஐசுவரியத்தை விட்டு இந்த உலகத்திருந்து பரலோகத்திற்குப் போகின்றார்கள்" என்றும் இப்படி முனிவர்களுடைய நிகழ்காலக் கதையும், பல அரசர்களுடைய இறந்தகாலக் கதையும் காணப்படுகின்றன.

இன்னும், கௌஷீதகோபநிடதம் என்பது இருக்கு வேதத்தின் கௌஷீதகி சாகையிலுள்ளது. அதின் முதலாம் அத்தியாயத்திலே "கர்க்ககுலத்திற் பிறந்த சித்திரனென்பவன் யாகஞ் செய்ய உத்தேசித்து, ஆருணியை வரணஞ் செய்தான். அவர் இவனுக்கு யாகஞ் செய்விக்கும்படி தனது புத்திரனாகிய சுவேதகேதுவை அனுப்பினார். அவர் வீற்றிருந்த பின்பு, சித்திரன், ஓ கௌதமன் புத்திரனே! மறைந்திருக்கும் உலகம் ஒன்று உண்டன்றோ, அவ்விடத்தில் என்னை ஆதானஞ் செய்வீரோ என்று கேட்டான்" எனப்படுகின்றது.

பாரத்துவாசர் வம்சத்தைச் சேர்ந்தவர் அங்கிரசு. அங்கிரசின் பரம்பரையில் வந்தவர் கர்க்கமுனிவர். கர்க்ககுலத்திற் பிறந்தவன் சித்திரனென்ற பிராமணன். ஆருணி கௌதம கோத்திரத்திற் பிறந்தவர்.

அதன் நான்காமத்தியாயத்திலே "இனி, கர்க்க கோத்திரத்திற் பிறந்த பாலாகியென்பவன், சர்வவேத வேதாந்தங்களையும் அத்தியயனஞ்செய்து சர்வப் பிரசித்தனாயிருந்தான். அவன் உசீநர தேசங்களிலேயே யிருப்பவன். அவன் மச்சதேசம், குரு தேசம், பாஞ்சாலதேசம், காசிதேசம், விதேகம் இவைகளிற் சஞ்சரித்தான். அவன் காசியிலுள்ள அஜாதசத்துரு என்பவரையடைந்து உமக்குப் பிர்மத்தைச் சொல்வேன் என்றான்" என்று ஒரு கதை சொல்லப்படுகின்றது. இக்கதை பிருகதாரணியக உபநிடதத்திலுமுள்ளது.

முன்சொன்ன கர்க்ககுலமே பாலாகிக்கும். அஜாத சத்துருவோ காசிராசன்.

இவ்வாறு வேதங்களிலே தேவர்கள் முனிவர்கள் அரசர்கள் பிராமணர்களுடைய நிகழ்கால இறந்தகால சரித்திரங்களும், பல தேசங்களின் பெயர்களும் காணப்படவும், அவ்வேதத்தை நித்தியம் சுயம்பு அபௌருஷேயம் என்று சொல்வதும், "சொல்லுவார் சொல்லினும் கேட்பார்க்கு மதியெங்கே" என்றவாறு நாம் அதனை என்றுகொள்ளுதலும் எவ்வண்ணம். முன்னைக் கற்பங்கள், சிருட்டிகளில் நிகழ்ந்த அச்சரித சம்பந்த உபதேசங்கள் பின்னைக் கற்பங்கள் சிருட்டிகளில் உபதேசக்கிரமமாக வந்தனவென்பது இதனால் நன்கு புலப்படும்.

இனி வேதப்பிரபஞ்சம் ஒடுங்குங் காலத்து உலகமும் அதிலுள்ள கர்த்தாக்களும் ஒடுங்குந் தன்மையால், ஏனையோர் அதன்

காரணராகமாட்டார். எப்பொருள் சொற்பிரபஞ்ச முதற்காரணமாகிய சுத்தமாயையைக் காரியப்படுத்துமோ, எப்பொருள் நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலையுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண் நின்ற மகாசங்காரத்தைச் செய்யுமோ, அப்பொருளாகிய சிவமென்னும் பதிப்பொருளே வேதகாரணப் பொருளாம். ஏனையோரையும் வேதகாரணரென அங்கங்கே கேட்கப்படினும், அது பரமகாரணத்துவத்தை விளக்குவதன்று. உபதேசக் கிரமமாகிய இடைக்காரணங்குறித்த வுரைகளாம்.

இன்னும், வேதம் பரசிவனாற் செய்யப்பட்டது என்பது பிருகதாரணியம ௩-ம் அத்தியாயம் ௫-ம் பிராமணத்து "அஸ்யமஹதோ பூதஸ்ய நிச்வஸிதம் ஏதத்பத்ருக்வேதோய சுர்வேத: ஸாமவேதோதர்வதாம்கிரஸ இதிகாச:புராணம்" என்னும் மந்திரத்தானும், இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் உள்ளடக்கிய வித்தைகள் பதினெட்டுக்கும் முதற்கருத்தா சூலபாணியாகிய சிவனேயென்பது சைவபுராணம், பூருவபாகம், க-ம் அத்தியாயம் "அஷ்டா தசானும் வித்யாநாமே தாஸாம் பிந்தவர்த்மநாம! ஆதி கர்த்தாகவி:ஸாக்ஷாச் சூலபாணிரிதிசுருதி:!" என்னும் உ௪-ம் சுலோகத்தானும் இனிது தெளியப்படும்.

---

## சிவபூஜாதிகார வினாவிடை.

(தூத்துக்குடி சைவ சித்தாந்த சபா பிரசுரம்.)

72-ம் பக்கத் தொடர்ச்சி.

உ௦—எதனாற்கொள்ளலாகாது?

வேதமானது பிருதுவி தத்துவ முதலாக நாததத்துவமீறாக முப்பத்தாறு தத்துவங்களையும், அவற்றின் சையோகப் பொருள்களையுந் தனித்தனி காலம்பிரமம், கருமம்பிரமம், பூதம்பிரமம், அன்னம்பிரமம் என இத்தொடக்கத்து வசனங்களாலே முதலில் அசித்துவர்க்கங்களாகிய பாசத்தைப் பிரமமெனவும், நடுவில் சித்தசித்தாகிய பசுவைப் (சீவாத்மாவை) பிரமமெனவும், அந்தத்தில் சித்தாகிய பதியைப் (சிவத்தை) பிரமமெனவுங்கூறி அம்மட்டிலே உபசாந்தியடைந்து விட்டமையால், அது பதியாகிய சிவமே வேதாந்தப் பொருளெனவும், சிவசாயுச்சியத்தைக் கொடுக்கவல்ல சைவசமயமே வேதாந்த சமயமெனவும், அச்சமய சித்தாந்தப்படி

சமய விசேட நிருவாண தீக்ஷையும், ஆசாரிய அபிஷேகமும் பெற்றுப் பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்த வுண்மையை யுணர்ந்து உபதேசிக்குஞ் சைவாசாரியரே வேதாந்த குருவெனவும் அங்கீகரித்தற்குத் தக்க ஏதுவாயிருத்தலால், இத்தகைய பெருமை வாய்ந்த சைவாசாரியர்களுக்கு ஜகத்குரு என்று வழங்கும் பிரயோகத்தை உண்மையாகக் கொள்ளலாமன்றி, வேதம் நடுவிலே பிரஸ்தாபித்து ஒதுக்கப்பட்டதும், ஆணவாதி மலத்திரயங்களிற் கட்டுண்டுழல்வதுமான ஜீவாத்மாவாகிய பசுவைப் பிரமமெனப் போதிக்கும் ஏகான்மவாத ஸ்மார்த்த சமய ஆசாரியர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு ஜகத்குரு என்று வழங்கும் பிரயோகத்தை உண்மையாகக் கொள்ளலாகாது.

உக—சைவசமய ஆசாரியர்களுக்கு வழங்கும் ஜகத்குருவென்னும் பிரயோகத்தை உண்மையாய்க் கொள்ளுதற்கும், ஸ்மார்த்த சமய ஆசாரியர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு வழங்கும் ஜகத்குருவென்னும் பிரயோகத்தை உபசாரமாகக் கொள்ளுதற்கும் மேற்கூறிய நியாயங்களையன்றி வேறு நியாயங்களுமுண்டோ?

உண்டு.

உஉ—அவை யாவை?

சைவசமய ஆசாரியராகிய திருஞானசம்பந்த சுவாமிகளை

"ஸ்வாமிந்ஸர்வஜ்ஞமந்நாதஜகந்நாதஜகத்குரோ" எனவும்

"பத்ராஸநம்ஸமாரோப்ய, பத்ராகாரம்ஜகத்குரும்"

எனவும் வரும் வசனத்தால், ஜகத்குருவென்று ஆலாசியமும், அமிர்தேசுரரைப் பூசித்த ஆதிசைவசிவாசாரியரொருவரை

"த்வம்ஹிலோககுரு:புஷ்பகிரிசந்தானஜோமஹாந்
சிஷ்யாநங்கீகுருக்ஷிப்ரம்யேதாநபீஸா துக்கிதாந்
பவதாராதிதம்சம்புமமிர்தேசம்பௌகஸாம்
ஸேவ்யத்வாஸ்யவஸவிதேபரிசர்யாஞ்சகல்பய
யதாபவேயு:யேதேவைஸ சிநோதுக்கஸாகராத்
ததாத்வம்கிருபயாவித்வங்குருலோககுரூர்யத:"

என்னும் வசனத்தால், காந்தம் சங்கரசங்கிதை உபதேசகாண்டமுங் கூறும் நூல்வழக்கமாயிருத்தலும், ஸ்மார்த்த சமய ஆசாரியர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஜகத்குருவென்று அவர்

கள் சீடர் வழங்க அதைக்கேட்டு உலகம் வழங்குகின்ற உலக வழக்கமா யிருத்தலுமேயாம்.

உங—ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை இவைபோன்ற நூல்களில் ஜகத்குருவென்று வழங்கியிருப்பதில்லையா?

இல்லை.

உச—இதுகாறுங் கூறிய நியாயங்களால் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சிவாலயங்களில் வந்து பூசித்தல் கூடாதென்பதே சுருதி யுத்தி அனுபவங்களுக்கு ஒத்ததாயிருக்கச் சில சிவாலயங்களில் வந்து பூஜித்திருப்பதாகத் தெரிகின்றதே அதற்குக் காரணம் யாது?

அவ்வச்சிவாலயங்களிலுள்ள அர்ச்சகர்களாகிய ஆதி சைவர்கள் கல்வி செல்வம் ஜனக்கூட்டம் முதலியவற்றால் குறைவுடையரா யிருந்தமையும் மற்றைய ஜாதி சைவசமயிகளும் விதிவிலக்குகள் தெரிந்துகொள்ளாதவரா யிருந்தமையும் சங்கராசாரிய ரவர்களுடைய சிஷர்களெல்லாம் செல்வாக்குடையவர்களா யிருந்தமையுமேயாம்.

உரு—ஆதிசைவர்களல்லாத எவ்வகைப் பிராமணர்களுக்கும் அவர்கள் குருமாருக்குஞ் சிவாலய பூஜை செய்யுமதிகாரம் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் சிதம்பராலயத்தில் தீக்ஷிதர்கள் பூசித்து வருவதற்குக் காரணம் யாது?

அந்த தீக்ஷிதர்களும் மற்றைய பிராமணர்களைப்போல பிரமதேவர் முகத்தி லுற்பவித்த பிரமசிருஷ்டாளாகாமல் ஸ்ரீ நடராஜ வள்ளல் திருக்கைலாயத்தினின்றும் சிதம்பரத்துக்கு எழுந்தருளுங்காலை அப்பெருமானுடன் வந்த சிவகணத்தலைவராகவும் அந்த நடராஜவள்ளல் தாமும் அவர்களி லொருவரெனக் கூறப்பெற்றவராகவுமுள்ள பெருஞ்சிறப்பினையுடைய தில்லை மூவாயிரவரின் வம்சத்தவரா யிருத்தலால் அவர்கள் ஆதிசைவப் பிராமணரோடொத்த பெருமையுடையவரா யிருத்தலே.

உசு—அப்படியானால் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஆதி சைவப் பிராமணர்கள் தங்களுக்குக் குருவல்லவெனவும் தாங்கள் பூஜிக்கும் ஆலயங்களில் பூஜிக்கக்கூடாதெனவும் விலக்குவதுபோல் தீக்ஷிதர்களும் விலக்குகின்றார்களா?

ஆம்.

உஎ—அப்படி விலக்கியிருப்பதற்கு ஆதாரமென்னை?

சங்கராசாரிய சுவாமிகள் நால்வரி லொருவராகிய கும்ப கோணம் சங்கராசாரிய சுவாமிகள் சிதம்பரம் சேர்ந்த காலையில் நடராஜவள்ளலைத் தெரிசனஞ் செய்யவேண்டுமென்றும் விபூதிப் பிரசாதத்தை தீக்ஷதாள் மடலோடு ஏந்தத் தாங்களெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதற்குக்கூட தீக்ஷ தாள் தாங்கள் கொடுக்கவே கையேந்தி வாங்கிக்கொள்ள வேண்டு மென்று கூறி மறுத்துவிட்டமையும் அதைப்பற்றி பெரிய சபை கூடி சாஸ்திர விவாதங்கள் செய்தும் முடிவில் தீக்ஷதர்கள் கொடுக் கவே சங்கராசாரிய சுவாமிகள் வாங்கிக்கொள்ள வேண்டுமென் றும் தீர்மானிக்கப்பட்டமையுமேயாம்.

உஅ—ஆதிசைவர்களல்லாத மற்றெவ்வகைப் பிராமணர்களுக் கும் அவர்களது ஆசிரியர்களுக்கும் சிவாலயங்களில் எழுந்தருளி யிருக்கும் மூர்த்திகளைப் பூசிக்குமதிகார மில்லாவிடினும் அம்மூர்த் திகளைப் பிரதிஷ்டை செய்யுங்காலத்தில் ஆசாரியராகவாவது சாதக ஆசாரியராகவாவது யிருந்து நடத்துவிக்கு மதிகார முண்டா?

சிவாலயப் பிரதிட்டையானது சிவாகம விதிப்படி செய்யுங் கிரியையா யிருத்தலானும் சிவப்பிரதிட்டாதி சிவாலய சம்பந்த மான சர்வ கிரியைகளுக்கும் ஆதிசைவர்களே அதிகாரிகளென்று சிவாகமங்களில் விஸ்தாரமாய்க் கூறியிருத்தலானும் கூடாது! கூடாது!!.

## முடிவுரை.

சைவசமயிகளே! இதுகாறுங் கூறிய சுருதியுக்தி யனுபவப் பிரமாணங்களால் சிவாலய சம்பந்தமான பிரதிட்டை பூசை முத லிய சகல கிரியைகளுக்கும் ஆதிசைவப் பிராமணர்களே அதிகாரிக ளென்றும், மற்றெவ்வகை யோரும் அதிகாரிக ளல்லரென்றும், யாதேனுமோர் துர் அபிமானத்தை முன்னிட்டு மற்றையோரைக் கொண்டு சிவப்பிரதிட்டை பூசை முதலியன செய்யப்படின் உல கத்துக்கும் அரசனுக்கும் பெருங்கேடு சம்பவிக்குமென்றும் பசு மரத்தாணிபோல் நாட்டப்பட்டமையால் சைவாகம நெறிப்படி பூசிக்கப்படும் நமது தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்களில் அத் தகைய தீங்கு நேரிடாவண்ணம் பாதுகாக்குமாறு உங்களனைவரை யும் வேண்டுகின்றேம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவண்ணாமலை

## தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண் மழலைம்முழவதிரும்
அண்ணாமலைதொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.

திருச்சிற்றம்பல்ம்.

அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொருளாய் விளங்கும் ஸ்ரீகைலாயபதியானவர் இந்த உலகத்தினுள் ஆங்காங்கிருக்கும் ஆன்மகோடிக ளுய்யும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுள் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், ஆளுடைய வரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகள், ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஆளுடையவடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் இந்நால்வர்க ளருளிச்செய்த தேவார திருவாசகங்களை உடையனவாய்ச் சோணாடு முதலிய தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோர்கள் ஏற்படுத்தின கிரமப்படியே நடுநாட்டுக் குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷமாகிய திருவண்ணாமலை யென்னுந் திருப்பதியும் ஒன்று.

இது கிருதயுகத்தில் அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்பன வாதியாய பல பெயர்களை யுடையதாய், சிவபெருமானே கிரிரூபமா யிருக்கப் பெற்றதாய், பார்வதியார் திருவவதாரமானதும், திருக்கண் புதைத்ததும், மகிடாசுர மர்த்தனஞ் செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கத பாண்டியன் பேறு பெற்றதும், அக்கினி வம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திரசோகந் தீர்த்ததும் இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களுள்ளதும், ஆதித்தனுக்குத் தரிசனங் கொடுத்ததும், சூரிய வம்சத்தனாகிய பிரதத்வராசனால் அநேக காணிக்கைகள் பெற்றதும், அஷ்டவசுக்களும் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்த்ததும், புளகாதிபன் பேறுபெற்றதும், அன்பர்

கள் வரம் புரிந்து நற்கதி யடையப்பெறுவதும், மகாஸ்தலமென்றும் நினைக்க முத்திதரும் தலமென்றும் புராணத்திற் சொல்லப்படுவதுமாகிய சிறந்த தலமாம்.

பரமசிவம் மலையுருவமானதற்குக் காரணம் யாதெனின், ஒரு கற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தான்தான் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் அக்கினிமலையாய் அவர்கள் மத்தியில்நின்று கலகத்தைத் தீர்த்தருளி அவர்கள் வேண்டுகோளினால் ஒரு சிறிய மலையாயுருக்கொள்ள, அதைக்கண்ட பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் சுவாமியை நோக்கி இம்மலையினுச்சியில் ஒரு சோதி எந்நாளுந் தெரியும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள், அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுக வென்றருளினர். அன்றியும், கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையி னுச்சியில் ஒரு சோதி காண்பிப்போம். அச்சோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும் இதைத் தொழுதவர்களுக்கும் தரிசித்தவர்களுக்குமேயல்லாமல் அவருடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங் கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மேலும் இம்மலை ஜனனமரணமென்னும் வியாதிக்கு மருந்துபோல இருப்பதினால் மலைமருந்தென்றும் அழல்வண்ணமா யிருப்பதினால் அருணாசலமென்றும் பெயர் பெறக்கடவது. இந்நாமத்தை ஒருதரஞ் சொன்னவர்க்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்று கோடி தரம் உச்சரித்த பலன் வருமென்று அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமனும் மகாவிஷ்ணுவும் ஆநந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமா யிருந்தால் அடியேங்கள் எப்படி பூசை செய்யக்கூடும். ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்கமூர்த்த மாவோமென்று அந்த மலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந் தோன்றியது. அதைக் கண்டு பரமானந்தராய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயங் கட்டுவித்தார்கள், அப்போது அந்த இடத்தில் வளப்பம் பொருந்திய நகரமும் மூந்நூறு தீர்த்தங்களும் உண்டாயின. அல்லாம

லும் ஆகாயகங்கை கிணறுகளாகவும், கற்பக விருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன. தேவர்களும் ரிஷிகளும் மனிதர்களாக வந்து பிறந்தார்கள். அரம்பா ஸ்திரிகள் தாசிகளாகப் பிறந்தார்கள். ஆகையால் எல்லா ஸ்தலங்களும் உடலென்றும், அருணசல ஸ்தலம் முகமென்றும், அதில் சிவபெருமான் கண்ணென்றும் இந்த ஸ்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும், இரண்டாம் சம்புவாகிய நந்திகேசுரர் மார்க்கண்டேய முனிவருக்கு அநுக்கிரகஞ் செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியபடி அம்மலையின்மேல் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சோதி தரிசனமாகிக் கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீப தரிசனமாகின்றபடியால் அத்தினத்தில் இந்திர தீர்த்தம் முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியை வலம்வந்து தங்கள் சக்திக்குத் தக்கபடி தர்மங்களையுஞ் செய்து அருணசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ் செய்து துதிப்பவர்கள் அளவிலாச் சம்பத்தையும் மோக்ஷத்தையு மடைவார்கள். இதன்றியும்,

ஆதிவாரத்தில் அந்த மலையை வலஞ்செய்பவர்கள் சூரியமண்டலத்தைப் பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச் சேர்த்துக் கொள்வார்கள்.

சோமவாரத்தில் வலம் வந்தவர்கள் தேவேந்திரனைப்போல ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாருப்பியத்தை அடைவார்கள்.

மங்கலவாரத்தில் வலஞ்செய்பவர்கள் தங்கள் கடனையும் தரித்திரத்தையும் சங்கிலித் தொடர்போல் வருகின்ற ஏழு பிறப்பையும் நீக்குவார்கள்.

புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சிணஞ் செய்வோர்கள் நாலு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் தெளிந்து தேவர்களாய்ப் பின் முத்தியை அடைவார்கள்.

குருவாரத்தில் வலம் வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கு மேலாவார்கள்.

சுக்கிரவாரத்தில் வலஞ் செய்தவர்கள் விஷ்ணு பதத்திற் சேர்வார்கள்.

சனிவார வுதயத்தில் வலம் வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தின் நற்பலனைக் கொடுக்கும். சிவராத்திரியிலும் வருஷப் பிறப்பிலும் ஐப்பசி முதலாகிய மூன்று மாதங்களிலும் வலம்

வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களினும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந் தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையை வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சிணஞ் செய்யும்போது, வாகனத்தின்மேலேறிக்கொண்டு வராமலும், போர்வை போர்த்துக்கொள்ளாமலும், குடை பிடித்துக்கொள்ளாமலும், தாம்பூலம் தரிக்காமலும், வேறொரு சிந்தனையில்லாமலும், மனதினால் வந்தனஞ்செய்து அருணாசலேசுரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாய் நடைகொள்ள வேண்டுமென்றும், அந்த நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ் செய்து ஆலயத்திற் போகின்றவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக் கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினாற் செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கவேி யுமையவள்பங்காமிக்க
சோதியேதுலங்குமெண்டோட் சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவே யணியணாமலையுளானே
நீதியானின்னையல்லா லினையுமாகினைவிலேனே.

திருச்சிற்றம்பலம்.

## சர்வாலய தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீ கைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த் தீபங்களில் ஒரு தீபம் அணைந்து போகின்ற தருணத்தில் ஓர் எலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப் போனபோது அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் தூண்டிய மாத்திரத்தில் பிரகாசம் அதிகப்பட்டது, அதற்குச் சிவபெருமான் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானிடச் சரீரமும் அரசும் மற்றப்பேறுந் தந்து பூமியில் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்கக் கட்டளையிட்டனர். அச்சக்ரவர்த்தியார் ஒருநாள் சிவதரிசனத்துக்குப் போக எத்தனித்துத் தன் இராச சின்ன முதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதட்சிணம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றி

யிருந்த தீபநெய்யின் ஒரு துளி இந்தச் சக்கிரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினது. அதனால் அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்போது ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து "சக்கிரவர்த்தியே நீ அகங்காரியாகையால் இத்தீங்கு நம்மாலுனக்குண்டாயிற்று. நீ இன்றுமுதல் நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவையானால் உனக்கு இந்த இரணந்தீர்ந்து சாயுச்சிய பதங்கிடைக்கு''மென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக்கேள்வியுற்ற சக்கரவர்த்தி ஆநந்தமடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒருநாள் ஸ்ரீகைலாயபதியாகிய சிவபெருமான் திருவுளமிரங்கிக் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேசோமயமா யெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச சாயுச்சியபதமளித்தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அந்தச் சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணந் தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணினர்கள். இவ்வாறு கைலாயபதியாகிய சிவபெருமான் மாபலிச்சக்ரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங் கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள் தோறும் கார்த்திகை மாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவும் ஆயின.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னாள் பரணி நக்ஷத்திரஞ் சாயங்காலை அதிவாசதீபத்தில் அக்கினிகாரியம் முதலியவைகளின் மூலமாய் மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத்தீபத்தைச் சுவாமி சந்நிதானத்திற்குனே பூசித்துவைக்க வேண்டும்.

மற்றைய நாள் சாயங்காலை அர்த்த சூரியமண்டலத்தில் தென்னைமரம், பனைமரம், பாக்குமரம், வாழைமரம், மூங்கில் என்னும் இம்மரங்களில் ஒருவிதமரத்தை ஆலயத்திற்கும், இந்திர திக்குக்கும் மத்திய ஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும். இந்த மரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம். தண்டவுன்னதப் பிரமாணம், சுவாமி கர்ப்பகிருகத்துக்கு விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது விமானம் கழுத்தினளவாவது இருக்கவேண்டும். இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சரு

காவது தாழஞ்சருகாவது அசோகச்சருகாவது விமானம்போல் கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணி நக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி, ஷடி தீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப் படுத்திக்கொண்டு அத்தீபத்தை அத்தண்டத்தின் மேல் வைத்து சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச் சருகுகள் எரிந்த பின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும். அச்சோதியை சிவபெருமானாகப்பாவனை செய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் மோக்ஷமுங் கிடைக்குமென்று ஆகமங்கள் சொல்லுகின்றன.

தண்டவிதி.

உத்தமம் தென்னமரம்,
மத்திமம் பனைமரம்.
அதமம் பாக்குமரம்,
அதமாதமம் வாழையும் மூங்கிலும்.

தண்டவுன்னதப் பிரமாணம்.

உத்தமம் விமானத்தளவு,
மத்திமம் அதன் கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும், சமுத்திரத்தைச் சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமி திதி பிரதானமாகவும் தீபம் வைக்க வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

அண்ணாமலையனை
உண்ணாமுலையொடு
பண்ணாற்பழிச்சிடில்
நண்ணாவினைகளே.

இந்த அருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதி வைத்துக்கொண்டவர்களும் அதைப் பூசித்தவர்களும் கரியகடல் சூழ்ந்த பூமி முழுதுங் காத்துத்தகுந்த புத்திர சம்பத்தும் போக சவுக்கியமும் தழைபெற வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசுரர் திருவடியினலே அவர் திருவருளுக்குப் பாத்திரராவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய சைவ தூஷண பரிகாரம்.

## சிவாசாரியப் பிரகரணம்.

பரார்த்தலிங்கப் பிரதிட்டை பரார்த்த பூசை உற்சவம் என்பனவும் தீக்ஷை முதலியனவுமாகிய சகல கர்மங்களும் செய்தற்கு, கௌசிகாதி பஞ்சரிஷி கோத்திரத்திற் பிறந்த ஆதிசைவர் என்னும் சிவப்பிராமணர்களுள், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்பவர்களாய், சமயம் விசேஷம் நிருவாணம் என்னும் மூன்று தீக்ஷையும் பெற்றவர்களாய், சைவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களாய், சிவாகமங்களில் விதித்த இன்னோரன்ன பல இலக்கணங்களையும் உடையவர்களாய் ஆசாரியாபிஷேகம் பெற்ற சிவாசாரியர்களே அதிகாரிகள் என்றும், மற்றைப் பிராமணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தார்களுள்ளும் மேற்கூறியவாறே, ஆசாரியாபிஷேகம் பெற்றவர்கள் மேற்கூறிய பரார்த்தலிங்கப் பிரதிட்டை முதலியன நீங்கலாக மற்றை ஆன்மார்த்த லிங்கப்பிரதிட்டை தீக்ஷை முதலியன செய்தற்கு அதிகாரிகளென்றும், அவர்களெல்லாரும் மனிதப் பிறப்பினராயினும் தேவர்களாகப் பாவிக்கற்பாலர் என்றும், அவர்களைப் பூசிப்பவர்கள் சிவனைப் பூசிப்பவர்களென்றும், அவர்களைத் தூஷிப்பவர்கள் சிவனைத் தூஷிப்பவர்கள் என்றும், அவர்களுக்குத் தொண்டு செய்து அவர்கள் சொற்கேட்டு நடத்தல் பெரும்புண்ணியமென்றும், சிவாகமங்கள் செப்புகின்றன.

### கிறிஸ்து சமயம்.

யாத். உகூ-ம் அதிகாரத்தில் ஆரோனையும் அவன் புத்திரரையும் ஆசாரியராக அபிஷேகம்பண்ணல் வேண்டும் என்றும் அபிஷேகவிதி இன்னது என்றும் யெகோவா விதித்தார் எனவும், ஷை சO-ம் அதிகாரத்தில் அவ்விதிப்படி மோசே அவர்களுக்கு அபிஷேகம் பண்ணினன் எனவும், எண். அ-ம் அதிகாரத்தில் யெகோவுக்கு மற்றைத் தொண்டுகளைச் செய்யும் பொருட்டு லேவியர் இஸ்ரவேலரினின்றும் பிரித்து அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் எனவும், எண். கஅ-ம் உO-ம் வசனத்திலும், உபா. கஅ. க. உ. வசனங்களிலும் ஷை கசு-ம் வசனத்திலும், ஆரோனுக்கும் அவன் புத்திரருக்கும் அவன் பிதாவின் வம்சத்தாராகிய லேவியாசாரியருக்கும் அவர்கள் சகோதரராகிய இஸ்ரவேலரோடு பாகமும் சுதந்தரமும் இல்லை. யெகோவாவே அவர்களுக்குச் சுதந்தரம் என

வும், எண். கஅ-ம் அதிகாரத்தில் இஸ்ரவேலர் யெகோவாவுக்குக் கொண்டுவந்து கொடுக்கும் இறைச்சி, அப்பம், காணிக்கை முதலியவைகளில் ஆரோனுக்கும் அவன் புத்திரருக்கும் லேவியருக்கும் பங்கு உண்டெனவும், உபா. கஉ-ம் அதிகாரத்தில் லேவியரைக் கைவிடலாகாது எனவும், ௸ கஎ-ம் அதிகாரத்தில் சகலரும் லேவியர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும் எனவும், எண். கசு-ம் அதிகாரத்தில் ஆரோனுக்கு விரோதமாகப் பேசினவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் எனவும், லேவி. உக-ம் அதிகாரத்தில் இவர்கள் சந்ததியார்களே தலைமுறைதோறும் ஆசாரியர்களாதற்கு அதிகாரிகள் எனவும், இன்னஇன்ன இலக்கணங்களை யுடையவர்களே ஆசாரியர்களாதற்கு உரியரெனவும், மத். க௦-ம் அதிகாரத்தில் யேசு தன்னுடைய சீஷரைநோக்கி உங்களை அங்கீகரிக்கிறவன் என்னையும் அங்கீகரிக்கிறான் என்னை அங்கீகரிக்கிறான் என்னை அனுப்பியவரையும் அங்கீகரிக்கிறான். இந்தச் சிறியவர்களில் ஒருவன் என் சீஷனென்று அவனுக்கு ஒரு கலசந் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகான் என்று சொல்லி வியாதிகளை நீக்கவும், பிசாசுகளை ஓட்டவும், அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் எனவும், சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே உன் சமயநூல் பேசுதல் கண்டும், மனிதர்கள் எல்லாருஞ் சமமாயிருக்க, சைவர்கள் தங்கள் அறியாமையால் அவர்களுட் சிலரை ஆசாரியர்களென்றும் பிராமணர்களென்றும் பெயரிட்டு, அவர்களே உத்தமோத்தமர்களென்று அவர்களை வணங்கி அவர்களுக்குத் தொண்டுசெய்து திரிகிறார்களென்று நீ புலம்புவது என்னை?

---

## சரீரசுத்திப் பிரகரணம்.

தினந்தோறும் அனுட்டானம், செபம், பூசை, சிவாலய சேவை, வேதாகமாதி, சாத்திரபடனம் முதலிய சற்கருமங்களை, சலத்தினாலே விதிப்படி சரீரசுத்தி பண்ணித் தௌதவஸ்திரம் தரித்துக்கொண்டே செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறே செய்யாமை பாவமென்றும், சைவநூல்கள் சாற்றுகின்றன.

யாத். க௦. கக. யெகோவா மோசேயை நோக்கி, மூன்றாம் நாளிலே யெகோவா சகல ஜனங்களுக்கும் பிரத்தியக்ஷமாகச் சீனாய் மலையின்மே லிறங்குவார். ஆதலால் நீ ஜனங்களிடத்திற்

போய், இன்றைக்கும் நாளைக்கும், அவர்கள் தங்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கும்படி செய்து அவர்களைப் பரிசுத்தப்படுத்தி மூன்றாம் நாளுக்கு ஆயத்தமா யிருக்கும்படி செய்வாயாக. ஷெ ௪௦, ௧௨, ௧௩, ௧௬, ௩௧, ௩௨. நீ ஆரோனையும் அவன் புத்திரரையும், சபையின் ஆவாசவாசலில் வரச்செய்து, அவர்களைச் சலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து, ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களைத் தரிப்பித்து எனக்கு ஆசாரியத் தொண்டு செய்யும்படி, அவனுக்கு அபிஷேகம்பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக.—அப்படியே மோசே செய்தான், யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் செய்தான். அவ்விடத்திலே மோசேயும், ஆரோனும், அவனுடைய புத்திரரும், தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள். யெகோவா மோசேக்குக் கட்டளை இட்டபடி அவர்கள் சபையின் கூடாரத்திற் பிரவேசிக்கிறபொழுதும், வேதிகையைச் சமீபிக்கிற பொழுதும் கழுவுவார்கள். ஷெ ௩௦, ௧௭-௨௧, யெகோவா மோசேயை நோக்கி, கழுவுகிறதற்குப் பித்தளையினாலே ஒரு தொட்டியை யுண்டுபண்ணு. அதின் பாதமும் பித்தளையா யிருக்கவேண்டும். அதைச் சபையின் ஆவாசத்துக்கும் வேதிகைக்கும், இடையில் வைத்து, அதிலே சலம் வார்க்கவேண்டும். அதில் ஆரோனும், அவன் புத்திரரும், தங்கள் கைகால்களைக் கழுவக்கடவர்கள். அவர்கள் சபையின் ஆவாசத்தில் பிரவேசிக்கும்பொழுதும், யெகோவாவுக்குத் தகனபலி செலுத்தும்படி தொண்டுசெய்ய வேதிகைக்குச் சமீபிக்கும்பொழுதும், சாவாதபடி சலத்தினால் தங்களைக் கழுவக்கடவர்கள். இது தலைமுறை தலைமுறையாக அவனுக்கும், அவன் சந்ததியாருக்கும், நித்திய நியமமாயிருக்குமென்றார்.

இப்படியே சரீரசுத்தி அத்தியாவசியகமென்றும், அது செய்யாதார் தண்டிக்கப் படுவார்களென்றும், உன் சமயநூல் பேசுதல் கண்டும், நீ எங்களை இகழ்வது மடைமையன்றோ?

---

பிழை திருத்தம்—64-வது பக்கம் 18-வது வரியில் கேட்டு என்பதை கூறி என்று திருத்துக.

## ஓங்கார விளக்கம்.

இந்நூல் நவீனமாக சித்தாந்த சைவ சரபம் சோளங்கிபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியாரவர்களால் இயற்றி அச்சிடப்பட்டுள்ளது.

யௌவனம் தொடங்கி நெடுங்காலமாக வைதிக சைவ நெறியை இடையறுப்பேரன்போடு உலகினர்க்குப் போதித்து வரும் உத்தம சைவப் பிரசாரகர்களுள் இவரும் ஒருவர். இவர் இரங்கோனில் உத்தியோகஞ் செய்து கொண்டிருந்தபோது மிகவும் பாடுபட்டு வெளியிட்ட சித்தாந்த சாத்திரங்களினாலும் செய்து வந்த பிரசங்கங்களாலும், மாணாக்கர்களுக்கு அறிவுறுத்திய சித்தாந்த சாஸ்திரோபதேசங்களாலும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் உள்ளிட்ட எண்ணிறந்த சிவனடியார்கள் சைவ நன்னெறியிற்றலைப்படுவாராயினர். நம் சைவப்பத்திரிகை உலகில் பரவி அபிவிருத்தியடையுமாறு இவர் செய்த உதவிகளும் அளப்பில. இவர் இப்போது இயற்றிய ஒங்கார விளக்கம் இவர் பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கிக்கொண்டிருக்கிறது. இதில் பஞ்சாக்கரத்தின் பொருளும், பல சமயத்தினராலும் பொதுவாக ஸ்மரிக்கப்படும் ஓமெனப்படும் ஒரெழுத் தொருதனிமொழியின் பொருளும், இது சிவபெருமானையே யுணர்த்தி நிற்றலும் அதிதீவிரபாகுவமடைந்த மாணாக்கனுக்கும் ஞானாசிரியனுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையெனக் கடாவிடைகளாக நானூற்றுக்கு மேற்பட்ட மந்திர சுலோகங்களை மேற்கோளாகக் காட்டி விளக்கப்பட்டுள்ளனவாகலின் இந்நூல் சைவ சமயிகளுக்கு மாத்திரமன்றி ஓங்காரத்தின் உண்மைப்பொருளை யறிய விரும்பும் வைணவர் ஸ்மார்த்தர் முதலிய எல்லோருக்கும் இன்றியமையாததாம்.

பத்திரிகாசிரியர்:

இ. ஆதிமூல முதலியார்.

# அறிவிப்பு.

இப்போது வி. பி. தபாலில் அனுப்பப்படுவன யாவும் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும். சந்தாதாரர்கள் சந்தா ரூபா 1½ யோடு இரண்டணு சேர்த்து ரூபா 1-10-0 கொடுக்க வேண்டியிருக்கிறது. சந்தாதாரர்களே மணியார்டர் மூலமாய் ரூபா 1-6-0 அனுப்பினல் இரண்டணு அநுகூலமாயிருக்கும். எமக்கும் பிரயாசை குறையும். இதை அன்பு கூர்ந்து சந்தாதாரர்கள் சிந்தித்திடுக.

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டி யிருப்பதனுலும், இத்தமிழ் நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயா யிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபி விருத்திக்கு இன்றியமையாத கருவியா யிருப்பதனுலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது எம்மால் வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்

# தேள் கடிக்குச் சிகிச்சை.

1. படிகாரத்தைத் தூள் செய்து இரண்டொரு சிட்டிகைத் தூளை ¼ ஆழாக்குக் குளிர்ந்த சலத்திலிட்டுக் கலக்கிக்குடித்தால் பல சமயங்களில் குணமாவதைக் கண்டோம்.

2. நவாசாரத்தைத் தூள்செய்து கல்சுண்ணும்போடு சேர்த்து மோந்தாலும் குணமாகும்.

3. பர்மாங்கனேட் ஆப் பொடாஷ் (Permanganate of Potash), டார்ட்டாரிக் ஆஸிட் (Tartaric Acid) இவைகள் ஒவ்வொன்றிலும் அரிசிப் பிரமாணம் எடுத்து கொட்டினவிடத்தில் வைத்து ஒரு துளி நீர்விட்டால் உடனே பொங்கி குணம் செய்யும். இதை அதிகமாக உபயோகித்தால் சிறிது இரணம் உண்டாகும். தேள் மருந்து வியாபாரிகள் சிலர் விற்பதும் இவையே. இவை இரண்டும் எல்லா இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் இரண்டணுவுக்கும் கிடைக்கும்.

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஞு முதல் 1919ஞு வரையில் வெளிவந்தவை.) | | | | |
| காலிகோ கட்டடம் செய்தது | விலை | 5 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | | 0 | 1 | 0 |
| ஞானனந்த சம்பாஷணை | | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | | 0 | 1 | 0 |
| கோபப் பிரசாத உரை | | 0 | 1 | 6 |
| சிவலின்மாலிய மான்மியம் | | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | | 0 | 4 | 0 |


## பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனல் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனல் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினல் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனல் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப்படும்.


Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.